தினமலர்
நெல்லை
ஞாயிறு ஜனவரி 12, 2020
www.dinama



பாளை., சாரதா மகளிர் கல்லூரியில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

# பாளை., சாரதா கல்லூரியில் பொங்கல் கொண்டாட்டம்

திருநெல்வேலி, ஜன.12–

பாளை.,சாரதா மகளிர் கல்லூரியில் பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது.

பாளை.,சாரதா மகளிர் கல்லூரி வளாகத்தில் பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது. கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணபவ பிரியாஅம்பா, கல்வியியல் கல்லூரி செயலர் யதீஸ்வரி துர்கா ப்ரியா அம்பா, சாரதா மெட்ரிக் பள்ளி செயலர் யதீஸ்வரி தவப்ரியா அம்பா ஆசியுரை வழங்கினர். மாணவிகள் பேரவை செயலர் சண்முக பிரியா வரவேற்றார்.

தொடர்ந்து, கல்லூரி வளாகத்தில் 11 துறைகளின் சார்பில் 11 பானைகளில் சமத்துவ பொங்கல் விடப்பட்டது. கல்லூரி இயக்குனர் சந்திரசேகரன், பொங்கல் விழாவின் சிறப்பு குறித்தும், இந்த விழா கொண்டாடுவதன் நோக்கம் குறித்தும் பேசினார்.

இதைத்தொடர்ந்து கவிதை வாசித்தல், கும்மியடித்தல், வினாடி வினா போன்ற நிகழ்ச்சிகள் நடந்தன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவி சிநேகா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

மாணவிகள் பேரவை தலைவி 3ம் ஆண்டு தகவல் தொழில் நுட்பவியல் துறை மாணவி சத்ய லட்சுமி நன்றி கூறினார். விழாவில், பள்ளி, கல்லூரி மாணவிகள், ஆசிரிய, ஆசிரியைகள், அலுவலர்கள் பலர்கலந்து கொண்டனர்.